2002 மே 10]

(ஆஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2002). மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வருகிற 5 சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புடையவை. எனவே, கருத்துகள் கூற விரும்பும் உறுப்பினர்கள், இந்த 6 சட்டமுன்வடிவுகள்மீதும் கூறலாம். யாராவது பேசுகிறீர்களா? (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

பிற்பகல் 7-05

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி சம்பந்தமாகப் பல சட்டமுன்வடிவுகள் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதை நாங்கள் மானியக் கோரிக்கையிலும்....

6. அறிவிப்புகள்

(அ) 'யார்-எவர்' என்ற புத்தகம் உறுப்பினர்களுக்கு வழங்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணித்துளி. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 12-வது சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களின் வாழ்க்கை விவரக் குறிப்புகள் அடங்கிய 'யார்-எவர்' என்ற புத்தகம் அச்சிடப்பெற்று,

---

@ 8-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமன்றப் பேரவைச் செயலக நூலக 2-வது பிரிவில் தயாராக உள்ளது. உறுப்பினர்கள் அப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஆஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போதும், அதேபோல, நிதிநிலை அறிக்கையினுடைய விவாதத்தின்போதும், புதிதாக விதிக்கப்பட்டிருக்கிற அந்த விற்பனை வரி குறித்தும், அதேபோல, உயர்த்தப்பட்டிருக்கிற வரி குறித்தும் நாங்கள் நிறையவே சொல்லியிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நுழைவு வரி என்கிற பெயரால், Entry Tax எல்லாம் போட்டு, இப்போது வியாபார மந்தமே தமிழகத்திலே ஏற்படக்கூடிய ஒரு நிலையை அரசு உருவாக்கியிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய விவசாய இடுபொருட்களுக்கு, உரம் போன்றவற்றிற்கு எல்லாம் பலமுனை வரியை நீங்கள் போட்டு, அந்தப் பலமுனை வரி போடுகிற காரணத்தினாலே, அது மத்திய அரசு விதித்திருக்கிற அந்த M.R.P. Rate-ஐவிட உரங்கள், இடுபொருட்கள் எல்லாமே Essential Commodities Act-லே வரக்கூடிய காரணத்தினாலே, அந்த M.R.P. Rate-ஐவிட நீங்கள் அதிகமாக வரியைப் போட்டு விலையை உயர்த்துகிற காரணத்தினாலே, அது மத்திய அரசு சட்டத்திற்கே விரோதமாக அமைகிறது என்றுகூட நாங்கள் வலியுறுத்தினோம். Entry Tax-ஐப் போடுகிற காரணத்தினாலே பல்வேறு பொருட்களுக்கு விலை உயர்வு ஏற்படுகிறது. அதேபோல, பொருளாதார மந்தம் ஏற்படுகிறது. பக்கத்து மாநிலங்களிலே, பாண்டிச்சேரி, ஆந்திரா, கர்நாடகா போன்ற இடங்களிலே பொருள் விலை குறைவு என்று சொன்னால், யாருமே அங்கேதான் போய் வாங்கிவிடுவார்கள். ஒரு மனித சமுதாயத்தினுடைய எண்ணம் எது என்று சொன்னால், பக்கத்து மாநிலத்திலே எங்கேயாவது பொருள் கொஞ்சம் குறைந்த விலையிலே கிடைக்கிறது என்று சொன்னால், அங்குதான் போய் வாங்குவார்களேயொழிய, நீங்கள் விதித்திருக்கிற வரி காரணமாக விலைகள் எல்லாம் உயர்ந்து, அதாவது பொது விற்பனை வரி அதிகரிக்கப்பட்டிருக்கிற